**SC NO.51/2012** **Date:04.04.2025**

**கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் ), காஞ்சிபுரம் (பக்கம் )**

**சாட்சியாகிய திரு. ராமகிருஷ்ணன் என்ற Pw12 நபரின் வாக்குமூலம் (1876ம் ஆண்டின் 10 விதியின் Tr.A.Pachaiyappan, இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம்**

**செய்யப்படுகிறது.**

**பெயர் - திரு. ராமகிருஷ்ணன்**

**த/பெ, - திரு. ராஜகோபால்**

**வயது - 59/2025**

**தொழில் - சிறப்பு உதவி ஆய்வாளர்**

**முதல் விசாரணை:**

நான் தற்போது திருவண்ணாமலை மாவட்டம், செய்யார் உட்கோட்டம், மோரணம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். 02.07.2011 அன்று காஞ்சிபுரம் விஷ்ணு காஞ்சி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வந்த போது விஷ்ணு காஞ்சி காவல் நிலைய குற்ற எண்.405/2011ல் இ.த.ச பிரிவு 302 வழக்கில் கொலையுண்ட கந்தவேல் என்பவரின் பிரேதம் காஞ்சிபுரம் அரசு பொது மருத்துவமனையில் பிரேத பரிசோதனை செய்யப்பட்டு பிரேதத்திலிருந்து எடுக்கப்பட்ட உடல் உறுப்புகளை காவல் ஆய்வாளரின் கடவு சீட்டை பெற்று சென்னை மயிலாப்பூர் தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்தேன். பிரேதத்தின் மீது இருந்த நீல நிற கோடு போட்ட லுங்கி மற்றும் நீல நிற ஜட்டி ஆகியவற்றை ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் சடலக்கூறாய்விற்காக மருத்துவமனைக்கு எடுத்துச்சென்ற வேண்டுகோள் கடிதத்தில் நீதிமன்ற முத்திரை இருந்ததா என்றால் தெரியாது. பிரேத விசாரணை அரசு மருத்துவமனையில் நடைப்பெற்ற பிறகு உறவினர்களிடம் ஒப்படைத்தேன் என்றால் சரிதான். இறந்து போனவரின் உடல் ஏ.பி.டி பார்சல் சர்வீஸிலிருந்து

கொண்டுவரப்பட்டது.  மேற்படி பார்சல் சர்வீஸ் எந்த இடத்தில் இருந்தது என்று எனக்கு தெரியாது.  பிரேத விசாரணை அரசு மருத்துவமனையில் வைத்து ஒரு முறை மட்டும் வைத்து நடத்தப்பட்டது என்றால் சரிதான்.

**மறு விசாரணை இல்லை.**